**கல்கமுவ பிரதேச சபை**

**குருநாகல் மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 03 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 26 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கல்கமுவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் கணக்குகளைத் தயாரிக்கும் போது அட்டுறு அடிப்படை பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் நீதிமன்றத்தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது மாநகர பூங்காவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 907,684 ஆன 09 விளையாட்டு உபகரணங்கள் விடயங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 115,000 தொகையான VIP ஹட் கொன்வர்ஸ் துறை அளவு ரூபா 1,500,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சபைக்குரிய 32 மயானங்கள், 11 விளையாட்டரங்குகள், அஹட்டுவாவ வாரச் சந்தை காணி, கல்கமுவ பிரதேச சபைக் காணி மற்றும் இஹலகம நீர் செயற்திட்டக் காணி ஆகிய காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குரிய உழவு இயந்திரத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் வாடகை வருமானம் ரூபா 920,594 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பொது வியாபார தொகுதி கடை அறையொன்றுக்குரிய ரூபா 428,555 ஆன முற்கொடுப்பனவு தொகை செலுத்தப்படாததன் பேரில் கடையை மீண்டும் சபைக்கு கையேற்ற காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 6 வகை வைப்புக்களுக்குரிய ரூபா 32,855 ஆன 21 மீதிகள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஏ) ரூபா 6,898,973 ஆன நிலுவை வீதவரி, கடை வாடகை ஒரே தடவையிலான பணம் (key money), குத்தகை வாடகை மற்றும் அவ்வருமான விடயத்திற்குரிய ரூபா 78,635 ஆன முற்பண பெறுவனவுகள் நிதிக்கூற்றுக்களில் நிலுவை மற்றும் முற்பண பெறுவனவாக வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட நிதிய கணக்கின் மீதி ரூபா 452,012 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் அது 356,713 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் சம்பள நிரம்பல் ரூபா 103,308 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2016 மாகாண சபை அமைச்சு நிதி ஏற்பாடுகளின் கீழான கைத்தொழில் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 401,264 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் நிர்மாண கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,439,878 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(க்) மோட்டார் கிரேடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய ரூபா 916,635 மற்றும் JCB இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய ரூபா 54,504 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(க) சபைக்கு சொந்தமான 3 வாகனங்களை வாடகைக்கு வழங்குவதற்குரிய ரூபா 1,220,827 கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், மேலும் அக்கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டிற்குரிய 03 நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய 03 வருமான விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 5,450,373 நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) கல்கமுவ பொது வியாபார சந்தை மற்றும் பஸ் நிறுத்துமிட கடைகளிலிருந்து மீளாய்வாண்டிற்குரிய ரூபா 84,320 ஆன நிலுவை மின் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) கணக்குகளுக்கு இடையே பணத்தை மாற்றும் போது ஊழியர் கடன் கணக்கிற்கு பதிவு செய்யப்பட வேண்டிய ரூபா 250,000 வரவு தலைப்பின் கீழ் கணக்கீடு செய்த காரணத்தினால் சரி செய்யப்பட வேண்டிய ரூபா 250,000 வேறுபாடு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) மோட்டார் கிறேடர் கடன்கொடுத்தோர் பதிவேடு மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான உப அட்டவணைக்கு இடையே ரூபா 569,339 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) JCB கடன்பட்டோர் பதிவேடு மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் பட்டோலைக்கு இடையே ரூபா 400,651 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(இ) பதப்படுத்தும் ரோல் கடன்பட்டோர் பதிவேடு மற்றும் அட்டவணைக்கு இடையே ரூபா 79,542 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 79,892,236 ஆன கடன்பட்டோரிடமிருந்து ரூபா 15,963,160 ஆன கடன்பட்டோர் மீதிகளுக்காக காலப்பகுப்பாய்வ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓராண்டு மற்றும் அற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் ரூபா 43,484,484 கூட்டுத்தொகையான பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு சபையால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 69,305,719 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளிலிருந்து ரூபா 1,268,225 தொகை தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை. ஓராண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த மொத்தம் ரூபா 5,364,382 தொகையான மீதிகள் தீர்வு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை காலவீச்சில் வைப்புச் செய்திருந்த 293 மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,585,614 ஆல் மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் இனங்காணப்பட்டு மீள கொடுப்பனவு செய்வதற்கு அல்லது சபை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 16,995,688 கூட்டுத்தொகையான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

(ஆ) 14 மற்றும் 15 ஆம் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் முறையே ரூபா 238,271 மற்றும் ரூபா 245,567 தொகை திரண்ட நிதியத்திற்கு வரவு வைப்பதற்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | | | பெறுமதி ரூபா | இணங்காமை |
|---|---|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை | | | | |
| (அ) | 193 ஆம் விதி | | - | ஒவ்வொரு வருமானம் மற்றும் செலவினம் விடயத்தின் கீழ் மிகை மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கூற்றொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 218 ஆம் விதி | | - | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிற்கு ஒருமுறை பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2) | | 2,289,646 | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 224 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவை | | | |
| | (i) | 3.4.2 (அ) | | பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகள் பின்பற்றப்படாமல் வாகன திருத்த வேலைகள், படலை அமைத்தல் மற்றும் கரீஸ்பூச்சு பீப்பா கொள்வனவு பான்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டி ருந்தன. |
| | (ii) | 6.3.1(ஆ) மற்றும் 7.8.4(ஈ) | 979,500 | கேள்வி கோரும் நடைமுறை பிரசித்தப்படுத்தப்படாமல் இருந்ததுடன் சில கேள்விகள் அங்கீகரிக்கப்பட்ட நபர் / நபர்களினால் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 3.9.1 | 33,000,000 | வேலை நிறைவேற்றப்பட்டமை தொடர்பாக சங்கத்தின் இயலளவு தொடர்பாக திருப்தியடையாமல் 09 சமூக நலன் அமைப்புக்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| | (iv) | 6.3.3(ஆ) | 1,120,500 | கேள்வி திறக்கும் திகதி மற்றும் நேரம் கேள்வி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | 8.7.1(ஆ) | 229,500 | வழங்கல் தொடர்பாக கூறுவிலை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய வேலை / வழங்கல் வழங்கப்பட வேண்டிய திகதிகள் குறிப்பிடப்பட்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,467,230 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,022,434 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டிய லிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,380 | 4,290 | 3,349 | 1,050 | 1,170 | 1,127 | 1,192 | 203 |
| (ii) | வாடகை | 22,121 | 19,038 | 16,646 | 2,075 | 28,281 | 21,489 | 14,898 | 1,760 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 3,340 | 2,367 | 2,361 | 06 | 2,850 | 3,438 | 3,438 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 90,667 | 64,063 | 66,769 | 22,107 | 107,843 | 79,400 | 63,646 | 24,719 |
| | மொத்தம் | 119,508 | 89,758 | 89,125 | 25,238 | 140,144 | 105,454 | 83,174 | 26,682 |

### குறிப்பு

மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவையில் அறவிடப்பட்ட வருமானம் மற்றும் மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் வெவ்வேறாக இனங்காண்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் ரூபா 119 மில்லியனான வருமானமொன்றை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் கிடைப்பனவு உட்பட முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் பெறுவனவு உடபட ரூபா 89 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 26 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டு வரை ரூபா 25 மில்லியனாக இருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை அதிகாரப் பிரதேசத்தில் 652 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,094,420 ஆன வீத வரி பிரதேச சபை விதிகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் ஆதனங்களை மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் 2015 ஆகஸ்ட் முதல் 2017 திசெம்பர் வரை 19,991 சதுரஅடி அளவிலான 26 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக கட்டிட திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த புதிய நிர்மாணங்களுக்காக தற்காலிக மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 குத்தகை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 446,946 தொகையான வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆகக்குறைந்த கேள்வி ரூபா 224,488 தொகையான 09 குத்தகை ஆதனங்களை மீளாய்வாண்டில் கேள்வி கோரி வழங்குவதற்கு முடியாமையால் சபைக்கு வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 649,773 தொகையில் 2018 யூலை மாதம் வரை ரூபா 142,539 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் இறுதி வரை அறவீடுகள் அறவிடப்பட வேண்டிய பேரூந்து நிலையங்களில் 03 கடைகளுக்குரிய ரூபா 124,000 ஆன முற்பண தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 06 கடைகளுக்குரிய 2014 மார்ச் வரை கிடைக்க வேண்டிய ரூபா 2,231,065 தொகையான முற்கொடுப்பனவு தொகை மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1597/8 மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் தொலைபேசி / தொடர்பாடல் கோபுரங்கள் உயரம் 05 மீற்றர் முதல் 20 வரை ரூபா 2,000 உம் அதற்கு மேற்படும் உயரம் ஒவ்வொரு மீற்றறர் இற்கு ரூபா 100 வீதம் கொடுப்பனவு செய்து 20 கோபுரங்களை இணக்கச் சான்றிதழ் வழங்காமையால் குறைந்தது ரூபா 68,000 சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

**2.2.6 ஏனைய வருமானம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதப்படுத்தல் ரோலரை குத்தகைக்கு வழங்கியமையால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,431,227 தொகையான நிலுவை வாடகையிலிருந்து ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட ரூபா 1,214,344 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் மோட்டார் கிரேடர் இயந்திரத்தின் நிலுவை வாடகை ரூபா 4,218,691 ஆக இருந்ததுடன் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட ரூபா 3,148,982 தொகையுடன் அனைத்து பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) JCB இயந்திரத்திற்கு மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 2,850,953 ஆன நிலுவை வாடகையில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட ரூபா 1,725,556 தொகையுடன் அனைத்து பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 33 விடயங்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 520/7 மற்றும் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் விதிக்கப்பட்டிருந்த உப விதிகள் சபையினால் பின்பற்றப்பட்டிருந்தன.

**(ஆ) நிறைவேற்றப்படாத பணிகள்**

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட செலவினம் ரூபா 12,000,000 ஆன 08 நிர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீடு செய்யப்படாத விடயங்கள் நிறைவேற்றுதல்**

மீளாய்வாண்டின் போது ரூபா 10,124,323 ஆன பாதிடப்பாத 15 நிர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

**(ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருள் அளவு மற்றும் பசளை உற்பத்தியை கருத்திற் கொள்ளும் போது சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருள் 30 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. பசளை உற்பத்தி 42 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) திண்மக் கழிவுப்பொருள் நிலையத்திற்கு யானை / மிருகங்கள் உள்வருவதை தடுப்பதற்கு இடப்பட்டிருந்த யானை வேலி ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக செயலற்றுக் காணப்பட்டது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

---

நிலைபேறான அபிவிருத்தி 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பான கடிதங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம சபை தெளிவுபடுத்தப் பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. வறுமையை ஒழித்தலை நோக்காகக் கொண்டு சபையினால் எளிய குடும்பங்களுக்காக பொப் கோன் மஷின்களை வழங்குதல், பசுமாடு செயற்திட்டங்களை செயற்படுத்துதுல், மலசலகூட உதவிகள் வழங்குதல் மற்றும் மாணவர் உதவிப்பண வழங்குதல் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன செயற்படுத்தப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

---

சபைக்குச் சொந்தமான பவுசருக்கு பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகி 2017 யூலை மாதத்தில் ரூபா 34,500 இற்கு நீர் இயந்திரமொன்று பொருத்தப்பட்டிருந்தது. கொள்வனவு செய்த திகதியிலிருந்து நீர்ப்பம்பி செயலற்ற நிலைமையில் 2018 சனவரி 12 வழங்குனருக்குப் அப்பம்பி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே வரையில் இன்னுமொரு நீர்ப்பம்பி கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3.1 மனிதவள முகாமைத்துவம்**

---

**ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்**

---

மீளாய்வாண்டின் இறுதியில் சபையில் சபையில் வெற்றிட பதவிகள் 29 உம் மிகை பதவிகள் 01 உம் காணப்பட்டதுடன் அமைய / ஒப்பந்த பதவியணியினராக 04 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையால் பயன்படுத்தப்படுகின்ற 08 வாகனங்களின் உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையால் பராமரிக்கப்பட்டிருந்த 108 மயானங்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 விளைவற்ற சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 6,279,450 பெறுமதியான 03 மோட்டார் வாகனங்கள் எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 04 ஆண்டுகள் முதல் 06 ஆண்டுகள் வரை விளைவற்ற நிலைமையில் காணப்பட்டது.

**3.5 பெறுகை**

**3.5.1 வழங்கல் மற்றும் சேவைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 விளையாட்டரங்களுக்கு பெயர்ப்பலகை பொருத்துவதற்கான கூறுவிலை கடிதத்தின் திகதி, கூறுவிலை வழங்கப்பட வேண்டிய இறுதி திகதி குறிப்பிடப்படாதிருந்ததுடன் கிடைத்த மூன்று விலை ஒப்பீடுகளில் வழங்குனரால் இடப்பட்ட திகதி மற்றும் மாதம் மாற்றப்பட்டிருந்தது. மேலும், கூறுவிலை பத்திரங்களில் சபையின் திகதி முத்திரை ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தமையால் ஒரேநாளில் திறக்கப்படவில்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) ரூபா 141,000 செலவிடப்பட்டு சுற்றாடலுக்கு சார்பான பாதாதை நிர்மாணம் அவசர விலைகோரலொன்று என கருதி கேள்விகோரி 05 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவசர பெறுகையொன்றாக உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.2(அ) பிரிவின் பிரகாரம் கூறுவிலை கோரலொன்று இல்லாமல் சபைக்கு சொந்தமான வாகனங்களுக்காக ரூபா 210,000 பெறுமதியான கிறீஸ் பூச்சு பீப்பாயொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களை திருத்தம் செய்வதற்கு சந்தர்ப்பம் இருக்கும் போது கூறுவிலைக்கு போலியான கடித தலைப்புக்களின் கீழ் தயாரிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டிருந்த கூறுவிலையின் பிரகாரம் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டு கெப் வண்டிக்கு சுற்றுச்சீராக்கி முறைமையை திருத்துவதற்காக ரூபா 69,000 செலவிடப்பட்டிருந்தது.

**3.5.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்கமுவ பேரூந்து நிறுத்துமிட பாதசாரி கடவை கைவேலி தயாரிக்கும் I மற்றும் II கட்டங்களுக்காக ரூபா 979,500 தொகை 2017 ஒக்தோபர் 10 ஆந் திகதி மற்றும் 2017 நவம்பர் 10 ஆந் திகதியில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் 15 ஆந் திகதி வரை 04 கைவேலிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஒக்தோபர் 18 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சபை அதிகாரப் பிரதேசத்தின் 17 வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக 2017 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரை சபையினால் பூர்த்தி செய்யப்படாத முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் மற்றும் விலைப் பட்டியலுக்குரிய ஒப்பந்தகாரர்களின் கையொப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் கைநூலின் 3.9.1 பிரிவின் பிரகாரம் ஏதேனும் திட்டவட்டமான காலப்பகுதியில் சங்கமொன்றினால் நிறைவேற்றப்படுகின்ற மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 03 இற்கு கூடுதலாக இருக்க முடியாததுடன் தற்போது வழங்கப்பட்டுள்ள ஒப்பந்த பெறுமதியின் மொத்தம் ரூபா 2 மில்லியனை விஞ்சாமல் இருக்க வேண்டிய போதிலும் ரூபா 23.5 மில்லியனான 12 நிர்மாணங்கள் 04 சமூகநல அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 பந்தியின் பிரகாரம் சமூக நல அமைப்பொன்று 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களில் ஈடுபடும் போது பிரதேச செயலாளர் / மாவட்ட செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 02 விவசாய அமைப்புக்களுக்கு 4 ஒப்பந்தங்கள் வீதம் வழங்கப்பட்டிருந்தது. நேரடி ஒப்பந்தங்களை கையளிக்கும் போது திணைக்கள தலைவர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயரிடப்படும் இரண்டு பிரநிதிகளுடன் கூடிய மூன்று பேருடனான குழுவொன்றின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 07 வருமான விடயங்கள் மற்றும் 03 செலவின விடயங்கள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே 13 சதவீதத்திலிருந்து 84 சதவீதம் வரையான போதியளவிலான விலகலொன்றும் மூலதனச் சொத்துக்கள் திருத்தம் மற்றம் பராமரிப்பு செலவின விடயத்திற்காக பாதிடப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து ரூபா 1,673,571 செலவிடப்பட்டிருந்தமை பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ காரணியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படாமை மற்றும் பிழையாக கணக்கீடு செய்தமை. |
| | (ii) வருமானம் தவறாக கணக்கீடு செய்தமை. |
| | (iii) நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறைத்தும் / கூடுதலாக கணக்கீடு செய்யப்படாமை |
| | (iv) விட்டுவிடல் தவறுகள் |
| | (v) நடைமுறைப் பொறுப்புக்கள் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டமை |
| | (vi) ஆவணங்கள் மற்றும் அட்டவணைகளுக்கு இடையே இணக்கமின்மை மற்றும் ஆவணங்களை நாளது வரையாக்காமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | (ii) | சொத்துக்களை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே போதியளவு வேறுபாடுகள் காணப்பட்டமை |
| (உ) | செயற்திட்டங்களை செயற்படுத்தல் | (i) | பெறுகை செயற்பாடுகளை பின்பற்றாமை |
| | | (ii) | பாதீடு செய்யப்பட்ட நிர்மாண வேலைகள் செயற்படுத்தாமை |